**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும், அதன் துணைக் கம்பனியினதும் 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினதும் (“அதிகாரசபை”), அதன் துணைக் கம்பனியினதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 – நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல், 29(அ) பந்தி மற்றும் அத்தியாயத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரகாரம் நிதி அறிக்கையிடலில் தரத் தன்மை அடையாளங்களின் பிரகாரம் நம்பிக்கையான தகவல்கள் பொருட்மையான தவறுகளிலிருந்தும் பக்கச்சார்பின்றியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் அதிகார சபையின் பிரதான அலுவலகம், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்ட அலுவலகங்களில் வீடமைப்புக் கடன் சேகரிக்கும் போது ஏற்பட்டிருந்த மோசடிகளுக்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 1.33 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் ஏனைய பெற வேண்டியவைகளின் கீழ் கணக்கீடு செய்யபடப்ட போதும் அது தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம் | நிதி தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடையாதி ருந்தமையால் கணக்குகளில் அறவிட வேண்டிய அல்லது அறவிட வேண்டியதல்லாத அறவிட முடியாததாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. களுத்துறை மற்றும் ஏனைய 03 மாவட்டங்களுக்குரிய 2023 கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நம்பிக்கையான தகவல்களை வெளிப்படுத்த வேண்டியிருந்ததுடன் மோசடிகளைக் குறைக்கும் வகையில் கடனை சேகரிக்கக்கூடிய பிரகாரம் முறையான தகவல் முறைமையொன்று விரைவாக ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

களுத்துறை மாவட்டத்தில் ரூபா 5.05 மில்லியன் மோசடி மற்றும் மேலும் 03 மாவட்டங்களில் கடன் அறவீடுகளின் போது இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீடமைப்புக் கடன்பட்டோர் மீதி ரூபா 10,496.5 மில்லியன் ஆக இருந்ததுடன் கடன் பெற்றவர்களின் எண்ணிக்கை 350,000 ஆகும். இந்த கடன் 5, 10, 15 வருடங்களாக நீண்டகால ரீதியில் வழங்கப்பட்ட கடன் தவனையாக அறவிட வேண்டிய வீடமைப்புக் கடனாகும். எனினும் கடன் வழங்குதல் மற்றும் அறவிடுதல்களுக்குரிய தகவல்கள் முறையாக அறிக்கையிடுவதற்கான தகவல் முறைமையொன்று காணப்படாமையினால் கடன் தொடர்பாக சரியான தகவல்களை கணக்காய்விற்கு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. மேலும் காணப்பட்ட முறைமையில் தரவுகள் மாற்றமடைதல் மற்றும் நிதி மோசடிகள் தொடர்ச்சியாக மாவட்ட அலுவலகங்களிலிருந்து அறிக்கையிடப்பட்டதன் காரணமாக கடன் மீதிகளின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | | |
|---|---|---|
| i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயட்காலம் ஆகக்குறைந்தது ஆண்டிற்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட்டு எதிர்பார்த்த | பல்வேறு வகுப்புக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கிரயம் அல்லது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் நியமம் 01 இன் 92 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு தொடர்பாக நியம இலக்கம் 7 மற்றும் 65 ஆம் பந்தியின் |

| | | | |
|---|---|---|---|
| | தரத்தில் மாற்றங்கள் காணப்படுமாயின் அந்த வேறுபாடுகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 – கணக்கீட்டுக் கொள்கையில் கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் பிழையான பிரகாரம் கணக்கீடு மதிப்பீகளில் மாற்றமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 28.82 மில்லியன் ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறு மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் கிரயம் ரூபா 218.85 மில்லியன் ஆன நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்றது. அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் நியாயமான பெறுமதிகளை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்து மேற்கூறப்பட்ட பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 7 மற்றும் 3 இன் பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதன் பிரகாரம் கிரயத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii) | நியமத்தின் 27 மற்றும் 47 ஆம் பந்திகளின் பிரகாரம் காணிகளின் பெறுமதி நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 1987 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளின் போது கைப்பெற்றப்பட்ட கந்தான விடுமுறை விடுதிக்குரிய 17.43 பேர்ச் அளவான காணி கைப்பெற்றப்பட்டு 30 வருடங்களுக்கு மேற்பட்ட | மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு 2023.02.17 ஆந் திகதி பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. மதிப்பீடு கிடைத்தவுடன் கணக்கீடு செய்யப்படும். | காணிகளின் நியாயமான பெறுமதிகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தை விஞ்சியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அப்பெறுமதி ரூபா 2,520 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 8 – நிதி ஏற்பாடு, நிச்சயமற்ற பொறுப்புக்கள் மற்றும் நிச்சயமற்ற சொத்துக்கள், 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிச்சயமற்ற பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு அதில் 60 சதவீதம் அல்லது 90 சதவீத அளவு நிதி ஏற்பாடு செய்யப்படல் வேண்டும். எனினும் அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கை 8.1 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அதிகார சபைக்கு எதிராக வெளித்தரப்பினரால் நீதிமன்றங்களில் தொடரப்பட்ட 26 வழக்குகள் தொடர்பாக நிகழத்தக்க இழப்பீடாக இனங்காணப்பட்ட ரூபா 2,118.2 மில்லியன் தொகையில் பத்து சதவீதம் மாத்திரம் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் இருந்து நிகழத்தக்க பொறுப்புக்களில் தன்மையின் பிரகாரம் படிப்படியாக அதிகாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமங்களுக்கு இணங்க நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக போதியளவான ஏற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 – பெறுமதி மாற்றல் கொடுக்கல் வாங்கல்களில் எழுந்த வருமானம். | | |
| i) | நியமத்தின் 16 ஆவது பந்தியின் பிரகாரம் பெறுமதி மாற்றக் கொடுக்கல் வாங்களில் எழுந்த வருமானம் காசு அல்லது காசுக்கு சமமானவைகள் காசு உட்பாய்ச்சலாக பிற்போட்ட ரீதியில் நியாயமான பெறுமதி கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய பெயரளவு காசு அளவினை விட குறைவானவிடத்து எதிர்பார்க்கப்பட்ட வட்டி வீதம் | வீடுகள் மற்றும் காணி பெறுபவர்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள உடன் படிக்கையின் பிரகாரம் சமமான தவணைகளில் அறவிடப்படுகின்றது. அதன் பிரகாரம் வருமானங்களை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. நியமம் 10 இன் 34 ஆம் உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி வருமானமாக | நியமத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வீட்டு கடன் தவணை மற்றும் வட்டி வருமானம் இனங்காணப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (imputed rate of interest) பயன்படுத்தி சகல எதிர்கால பெறுவனவுகளும் கழிவுடன் மாற்றி நியாயமான பெறுமதியை குறைத்துரைத்தல் வேண்டும். எனினும் நியாயமான பெறுமதி மற்றும் பேரளவு பெறுமதிகளுக்கிடையே வேறுபாடுகள் நியமத்தின் 33 மற்றும் 34 ஆம் பந்திகளின் பிரகாரம் வட்டி வருமானமாக இனங்காணப்படல் வேண்டும். எனினும் அதிகாரசபையினால் தவணைப் பணமாக அறவிடும் அடிப்படையில் சலுகை வட்டி விகிதத்தின் கீழ் நீண்டகால வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட வீடுகள் மற்றும் காணிகளுக்குரியதாக அறவிடப்படுகின்ற தவணைப் பணம் மற்றும் வட்டி தொடர்பாக அதிகார சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இனங்காணப்பட்டுள்ளது. | |
| ii) | நியமத்தின் 87 B பந்தியின் பிரகாரம் தொகுதியின் கணக்குகள், கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்கியிருந்தமை உறுதிப்படுத்தப்படுவதற்கு அதிகார சபை மற்றும் துணைக் கம்பனிகளின் நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சீராக்கங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது துணைக் கம்பனிகளான ஓசன் விவ் டெவெலப்மென்ட் தனியார் கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமம் (LKAS) பின்பற்றி இருக்கும் போது அதற்குரிய கணக்கீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணைந்த சீராக்கம் மேற்கொள்ளப்படாமல் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | ஒன்றிணைந்த கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கும் போது கணக்கீட்டு நியமத்தை பயன்பாட்டின் பிரகாரம் பொருட்மையான தாக்கங்கள் ஏற்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல்கள் வாங்கல்களுக்கான வருமானம், 44 ஆம் பந்தியில் காணப்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மாற்றல்கள் அல்லாத கொடுகல் வாங்கல்களிலிருந்து மீளாய்வாண்டின் போது அதிகார சபைக்கு கிடைத்த ரூபா 346.19 மில்லியன் அரசாங்க மானியம், வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு இனங்காணாமல் ஒதுக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | கடனுக்காக திறைசேரியிலிருந்து வழங்கப்பட்ட பணம் மூலதன பெறுவனவாக கருதி ஒதுக்கக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுமாயின் பிரமாணத்தின் பிரகாரம் அரச மானியங்கள் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 12 குத்தகை 59 ஆவது பந்தியின் பிரகாரம் குத்தகை கொடுப்பனவாளர்களின் நிதிக்கூற்றுக்களில் நிதிக் குத்தகை தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதும் அதிகார சபையால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட மாடி வீடுகளின் பெறுமதி ரூபா 81.62 மில்லியன் நிதிக் குத்தகையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மாடி வீட்டு தவணைப்பணத்தின் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் அந்த வீடுகளுக்காக பணம் செலுத்தி முடிவடைந்த பின்னர் உரித்து உரிய வீட்டு நலனாளிகளுக்கு உரித்தாகும். | நியமத்தின் பிரகாரம் நிதிக்குத்தகை வழங்குகின்ற போது விற்பனை செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |
| (எ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 13 – முதலீட்டு ஆதனங்கள், 7 ஆவது பந்தியின் பிரகாரம் வாடகை உழைத்தல் அல்லது மூலதனப் பெறுமதி அதிகரிப் பதற்காக அல்லது அந்த நோக்கங்கள் இரண்டுக்குமாக வைக்கப்பட்டுள்ள காணி அல்லது கட்டிடம் அல்லது கட்டத்தின் ஒரு பகுதி அல்லது இந்த இரண்டும் முதலீட்டு ஆதனமாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதும் அதிகார சபைக்குச் | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இருப்புக்களில் உள்ள வீடுகள், கடைத்தொகுதிகள் குறித்துரைத்தவாறு விற்பனை செய்வதற்கும் வாடகை குத்தகை அடிப்படையிலா என்பது தீர்மானிக்கப்படவில்லை. மேலே முகாமைத்துவத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்த நடடிவக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நியத்திற்கு இணங்க முதலீட்டு ஆதனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொந்தமான வாடகை/ குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ரூபா 1,024.23 மில்லியன் ஆன வீட்டு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கிரயம் ரூபா 3.81 மில்லியன் ஆன வாடகை / குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வீடுகள் மற்றும் 05 கடைகள் முதலீட்டு ஆதனமாக கணக்கீடு செய்யப்படாமல் இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் அதிகார சபையின் வாடகை / குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த வீடுகள் மற்றும் 1809 கடைகள் என்பவற்றின் பெறுமதி மற்றும் வாடகை / குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு இனங் காணப்பட்ட 37 கடைகள் என்பவற்றின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 14 – தொடர்புடைய தரப்பினர்களை வெளிப்படுத்துதல், 16 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகார சபையினால் தொடர்புடைய தரப்பினர் தொடர்பாக வெளிப்படுத்த வேண்டிய போதியளவான தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் அண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது தொடர்ந்தும் வெளிப்படுத்துதல் வெளிப்படுத்தப்படும். | நியமத்திற்கு இணங்க தொடர்புடைய தரப்பினர் மற்றும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 17 – பொருட்கள் அறிக்கையிடலின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்று அதன் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் கடந்தகால செயலாற்றலை மதிப்பிடல் மற்றும் எதிர்கால வளங்களை | நிதிக் கூற்றுக்களில் வீடுகள் மற்றும் விற்பனை குறிப்புக்களின் இலக்கம் 30 உம் கடன் மூலதனக் குறிப்பு 5 – 16 வரையும் கடன்பட்டோர் வட்டி குறிப்பு இலக்கம் 21, 32 உப பட்டோலையின் கீழும் காண்பிக்கப்பட்டுள்ளது. | தனியாக இனங்காணக்கூடிய பிரிகளை இனங்கண்டு செயலாற்றளை தனியாக மதிப்பீடு செய்வதன் மூலம் ஒட்டுமொத்த செயலாற்றல்களிலும் |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்குதல் தொடர்பான நீர்மானங்களை எடுப்பதற்கு, நிதி தகவல்கள் தனித்தனியாக அறிக்கையிடுவதற்காக நிறுவனத்தில் தனியாகக் காண்பிக்கக்கூடிய செயற்பாடுகளை இனங் காண வேண்டியிருந்த போதும் அதிகார சபை அவ்வாறு இனங்காணக்கூடிய வீடுகளை விற்பனை செய்தல், காணிகளின் விற்பனை மற்றும் வாடகைக்கு வழங்குதல், வீட்டுக் கடன் வழங்குதல், வீடமைப்பு செயற்திட்டங்களை அமுல்படுத்துதல், சேவை பங்களிப்பாளர் செயற்திட்டங்கள் போன்றவை தனித்தனியாக இனங்காணக்கூடிய செயற்பாடுகள் தனித் தனியாக இனங்கண்டு செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | செயலாற்றல் நிலைமையை அதிகரிக்க முடியும். |
| (ஒ) | அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கை குறிப்பு இலக்கம் 13 இன் பிரகாரம் பணம் செலுத்தப்படாமல் வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் அரசாங்கத்தின் காணிகளை கைப்பெற்றும் போது காணியின் சந்தைப் பெறுமதி மற்றும் ஆரம்ப செலவினத்திற்கு சமமான தொகையொன்று ஒதுக்கமாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 13.3 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் 2013 ஆம் ஆண்டிலிருந்து அப்பெறுமதி கணக்குகளில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 இன் பின்னர் கையேற்கப்பட்ட காணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட / தெரிவு செய்யப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபைக்குச் சொந்தமான ஹெக்டேயர் 473.15 ஆன 8,286 காணிக் கூறுகளின் பெறுமதி மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 436.59 மில்லியன் ஆன அதிகார சபையின் அலுவலக மற்றும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்ட கட்டிடம் அமைந்துள்ள காணியின் அளவு சரியாக இனங்கண்டு அந்தக் காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை தனித்தனியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படவில்லை. தனித்தனியாக மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளின் அளவினை இனங்கண்டு அவற்றின் நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு மாவட்ட அலுவலக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் காணி விற்பனை பெறுமதி ரூபா 19.86 மில்லியன் ஆக இருந்த போதும் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 13.03 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் காணிகளின் விற்பனைப் பெறுமதியில் ரூபா 6.83 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்ட போதும் அதற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. | கொழும்பு மாவட்ட அலுவலகத்திற்குரியதாக இடம்பெற்ற குறைவாக பதியப்பட்ட பெறுமதி 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகவும் போதியளவான மேற்பார்வையின் கீழும் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான பட்டோலையின் பிரகாரம் ஆண்டிற்காக அறவிட முடியாக்கடன் ஒதுக்கம் ரூபா 368.56 மில்லியன் ஆக இருந்த போதும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 370.82 மில்லியன் ஆக காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 2.26 மில்லியனால் குறை கணிப்பீட்டிற்கு | 2023 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கை பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட எண்ணிகையுடன் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட்டிருந்தது. | | |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அதிகார சபையினால் வரிக்கு முன் இலாபம் ரூபா 1,287.41 மில்லியன் காண்பிக்கப்பட்ட போதிலும் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் சரியான வரிக்கு முன் இலாபம் ரூபா 1,196.26 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 91.15 மில்லியன் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.<br>மேலும் காசல்லாத வேறுபாடுகளின் கீழ் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான இலாபம் / நட்டம் கணிப்பிடும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய அறவிட முடியாக் கடன் மற்றும் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் முறையே ரூபா 370.82 மில்லியன் மற்றும் 53.84 மில்லியன் குறைத்துரைத்த பிரகாரம் சீராக்கப்பட்டிருக்கவில்லை.<br>இதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 424.66 மில்லியன் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் மானியப் பெறுவனவுகள் ரூபா 1,576.52 மில்லியன் ஆக இருந்த போதும் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்ட மானியப் பெறுவனவுகள் ரூபா 1,678.29 மில்லியன் ஆனமையால் | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரித்து மீண்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடங்குகின்ற காசுப்பாய்ச்சல் நிதி நிலைமைக் கூற்றிலும், நிதிச் செயலாற்றல் கூற்றிலும் நிதித் தகவல்களுடன் இணங்குதல் வேண்டும். |

நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 101.77 மில்லியன் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | நெரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து கிடைக்க வேண்டியவை | 104.35 | - | 104.35 | நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் மீதிகளை இணக்கம் செய்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடடிக்கை எடுத்தல் வேண்டும். |
| நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டியவை. | 52.51 | 41.83 | 10.68 | நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் மீதிகளை இணக்கம் செய்து இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு விரைவாக நடடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை (ரூபா. மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | CHP | 13.54 | விரிவான பட்டோலை | திணைக்களம் காணப்பட்ட காலப் பகுதியிலிருந்து கொண்டு வரப்படுகின்ற மீதியாகும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட சகல சொத்துக்கள், பொறுப்புக்களின் இருப்பு, சரியான தன்மை, முழுமையான தன்மை போன்றவைகள் தொடர்பாக முகாமைத்துவத்தால் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | கேள்வி வைப்பு | 5.11 | காலப் பகுப்பாய்வு | பட்டோலைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் இருப்பு வகைப்படுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பாக குறித்துரைத்த ரீதியில் இனங்காண்பதற்காக காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1984 - 1989 காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட்ட பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் பணத்திற்காக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 33 வருடங்கள் கடந்திருந்த போதும் அதில் ரூபா 291.9 மில்லியன் தொகையும், 1990 முதல் 1992 ஆம் ஆண்டுகளில் அமுல்படுத்தப்பட்ட பதினைந்து இலட்சம் வீடமைப்பு நிகழ்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன் பணத்திற்காக 30 வருடங்கள் கடந்திருந்த போதும் ரூபா 192.5 மில்லியன் தொகையும் அறவிடுவதற்கு முடியாமல் காணப்பட்டது. கடனை அறவிடுவதற்காக சரியான பரிடீசாதனை மேற்கொண்டு கடனை அறவடுவதற்கு பொருத்தமான வழிகளைன இணங்காணாமை இந்த நிலமைக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது. | மாவட்ட அலுவலகங்களின் பொறுப்பான பிரதி பொது முகாமையாளர்கள் / உதவி பொது முகாமையாளர்கள் மாவட்ட அலுவலகங்களுக்குச் சென்று அறவிடலை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பழைய கடன் மீதியை அறவிடுவதற்குாக விஷேடமான வழிமுறைகளை எடுத்து அவற்றை மேற்பார்வை செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகார சபையின் பாதுகாப்பு சேவையின் உத்தியோகத்தர்கள் கம்உதாவ நிகழ்சித்திட்டங்களின் போது ஏனைய நிறுவனங்களில் காட்சி கூடங்களுக்காக பாதுகாப்பு வழங்கியதற்காக சேவையில் ஈடுபடுத்தியதால் அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 6.32 மில்லியன் மீதி நனாவித கடன்பட்டோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 2.99 மில்லியன் அறவிட வேண்டிய நிறுவனம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மிகுதித் தொகையான ரூபா 3.3 மில்லியன் உரிய நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு முடியாது காணப்பட்டது. அதிகார சபையினால் பெறவேண்டிய மீதியை அறவிடுதல் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை இதற்கான காரணமாக இருந்தது. | கம்உதா நடைபெற்ற காலத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளை வழங்கியதற்காக கிடைக்கவண்டிய ரூபா 5.83 மில்லியன் தொகையில் பல வருடகாலம் பழைய மீதியாக இருந்தமையால் அது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 230.8 மில்லியன் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 15 வருடங்களுக்கு முன்னர் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 44.86 மில்லியன் மீதி காணப்பட்டது. இந்த மீதியை அறவிடுவதற்கு முடியாது காணப்பட்டதுடன் மீதி உறுதிப்படுதலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. தொடர்புடைய தரப்பினருடன் கொடுக்கல் வாங்கல் | அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கைகள் பின்பற்றிய போதும் இந்த நிறுவனங்களில் காணப்படுகின்ற நிதி நெருக்கடிகளின் அடிப்படையில் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு பொருத்தமான மற்றும் போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக இணக்கப்பாட்டுக்குவராமை இந்த நிலமைக்கு காரணமாக இருந்தது. | | |
| (ஈ) | அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தால் அமுல்படுத்தப்பட்ட கிராம சக்தி, விருசுமித்ரோ, சுத்திகரிப்பு மற்றும் குடிநீர், ஜனசெவன என்ற செயற்திட்டங்களுக்காக 2018, 2019 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட கூட்டு மொத்தமான ரூபா 67.47 மில்லியன் திறைசேரியிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எழுத்து மூலம் குறிப்பிடப்படாதிருந்த போதிலும் பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிஏற்பாடு திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டமையால் திறைசேரியிலிருந்து கிடைக்வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்றிட்டத்திற்காக நிதியேற்பாடு வழங்கப்பட்டதன் பின்னர் ஏனைய செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீட்டு வாடகை வருமானம் ரூபா 216.76 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 192.59 மில்லியன் அதாவது 88 சதவீதம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடவேண்டியதாக காணப்பட்டதுடன் இதில் பிரதான அலுவலகத்தின் கடன் மீதி ரூபா 25.05 மில்லியன் ஆகும். 03 இற்கும் 05 இற்கும் இடையிலான வருடத்திலிருந்து அறவிடவேண்டிய மீதி ரூபா 5.51 மில்லியனாகக் காணப்பட்டது. | அறவிடுவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு போதியளவானதும், செயற்றிறமானதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல்வேண்டும். |
| (ஊ) | செவன ஊடக அலகின்கீழ் 2022 திசெம்பர் 31 இல் எள்ளவாறு | அறவிட வேண்டிய நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்காக உரிய | அறவிடவேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| கிடைக்கவேண்டிய ரூபா 21.82 மில்லியன் மீதி காணப்பட்டதுடன் அதில் ரூபா 10.5 மில்லியன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற போதும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற ஆண்டுகளின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை இந்த நிலமைக்கு காரணமாகும். | நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படுகின்றது. | தேவையான நடபடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதிவரையில் நானாவித கடன்கொடுத்தோர் மீதியாக காண்பிக்கப்பட்டரூபா 1,554.3 மில்லியன் தொகையில் கால்நடை வள அபிவிருத்தி திணைக்களத்திற்கு செலுத்தவேண்டிய ரூபா 13.31 மில்லியன் காணப்பட்டதுடன் அது 13 வருடங்கள் கடந்திருந்த போதும் செலுத்துவதற்கோ அல்லது முறையான அங்கீகாரத்துடன் வருமானத்தில் சீராக்குவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. கண்டி தோட்ட வீடமைப்பு கணக்கில் காணப்பட்ட ரூபா 75.51 மில்லியன் கடன்கொடுத்தோர் மீதியை தீர்த்துவைப்பற்கு ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கால்நடைவள சபையின் கலஹா வீடமைப்புத் திட்டத்திற்காக பெறப்பட்ட மிகுதியான ரூபா 13.31 மில்லியன் மீண்டும் தேவையானதன் அடிப்படையில் கணக்குகளில் காணப்பட்டதுடன் தோட்ட வீடமைப்பு கணக்கு வழங்கப்பட்ட கடனுக்காக அறவிடவேண்டிய பணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலத்திலிருந்து கொண்டுவரப்படுகின்ற செலுதத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்ற்றுக்களில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள வைப்பாகக் குறிப்பிடப்பட்ட ரூபா 208.56 மில்லியன் | ஒப்பந்த நிறுத்தி வைத்தல் பணமாகும். பொறியியல் பிரிவுடன் கலந்துரையடி 2023 இன் வருமானத்தில் | நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற மீதிகளை விரைவாக தீர்த்துவைப்பதற்கு |

| | | |
|---|---|---|
| தொகையில் 05 மாவட்ட அலுவலகங்களின் வைப்புக்களின் கூட்டு மொத்தமான ரூபா 1.49 மில்லியன் தொகை 03 முதல் 31 வருடங்களுக்கடையிலான கால வீச்சுக்கிடையிலும், ரூபா 175.32 மில்லியன் கூட்டுத்தொகையானது 01 இற்கும் 02 வருடங்களுக்கும் இடையிலும் காணப்பட்ட போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்றிட்ட நடவடிக்கைகள் நாளதுவரையாக நிறைவேற்றப்பாடாமை இந்த நிலமைக்கு காரணமாக இருந்தது. | செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் I ஆம் பகுதியின் 3(1) ஆம் பிரிவு. | அதிகார சபைக்கு பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 6 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவதுடன் ஒரு அங்கத்தவர் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும். 2022 ஆம் ஆண்டில் ஒக்டோபர் முதல் 2023 ஆகஸ்ட் வரை நிதியமைச்சின் பிரதிநிதி இல்லாமல் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தி காணி கையளித்தல், உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் இந்த தீர்மானங்களின் முறையான தன்மை | 2023 ஆகஸ்ட் 28 ஆந் திகதி திறைசேரி பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக பிரச்சினையுடனான நிலைமை காணப்பட்டது. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | நிதிப்பிரமாணம் 135 | நிதி அதிகாரங்கள் கையளித்தல் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடைவ திருத்த வேண்டிய இருந்த போதிலும் அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டின் பின்னர் நிதி அதிகாரக் கையளித்தல் திருத்தப்பட்டிருக்க வில்லை. | நிதி அதிகாரங்களை கையளித்தலை திருத்துவதற்காக தயாரிக்கப்பட்டட அறிக்கை பணிப்பாளர் சபை அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | நிதிப்பிரமாணம் 369 | அதிகாரசபைக்குச் சொந்தமான கணக்குகளில் இருந்து விநியோகிக்கப்பட்டிருந்த போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பபிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய கூட்டுமொத்தமான ரூபா 2.062 மில்லியன் ஆன காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கூட்டு மொத்தமாக ரூபா 77,666 ஆன 02 காசோலைகள் 28 வருடங்கள் கடந்திருந்த போதிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் | பதிற் கடமை நியமித்தல் உள்ளபடியான பதவி நியமிக்கப்படும் வரை தற்காலிக தீர்வாக மாத்திரம் இருந்ததுடன் பதவிக்கு முழு நேர | 03/2022 இன் பிரகாரம் முறையான பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புதல் தாமதம் | தகைமையுடன் வெளி அல்லது உள்ளக உத்தியோகத்தர்க ளை முறையான பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 01/2021 இன் வழிகாட்டி 3.4 ஆம் பந்தியின் (i x) ஆம் பிரிவு | உத்தியோகத்தர் சேவையில் தேவையாயனின் உள்ளபடியான பதவியை தாமதம் இன்றி நியமிக்க வேண்டியிருந்ததுடன் முழு நேர உத்தியோகத்தரின் சேவை தேவை இல்லையாயின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கிடையே கடமைகள் பகிர்ந்தளித்தல் வேண்டும் எனினும் 19 பதவிகளுக்காக பதிற்கடமை 01 வருடம் முதல் 03 வருடம் வரையான கால வீச்சு நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அடைந்ததற்கு காரணமாக பதிற்கடமை, கடமைகளை நிறைவேற்றுதல், மேவுகை செய்யும் அடிப்படையில் வெற்றிட பதவிகளின் கடமைகளை நிறைறவேற்றுவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. அமைச்சு மட்டத்தில் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் கலந்துரையாடப்பட்டு முறையான நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இன் 3 ஆம் பிரிவு | அரசாங்க நிறுவனம் ஒன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற விழாக்கள் மற்றும் திறப்பு விழாக்கள், மாநாடுகளை உள்ளடக்கிய அத்தியாவசியம் அற்ற மற்றும் முன்னுரிமை அல்லாத செலவினங்கள் கைவிட்டு அதற்காக அரசாங்க நிதி பயன்படுத்துமாறு இருக்குமாறு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டில் விழா நடவடிக்கைகளுக்காக ரூபா 2.272 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | விழா மற்றும் திறப்பு விழா, மாநாடுகளுக்கான செலவினங்களின் கூட்டுமொத்தம் ரூபா 2.17 மில்லியன் ஆகும். | சுற்றறிக்கை ஆலோசனை முரணாக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை அங்கீகரித்த மற்றும் பரிந்துரை செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் அதிகா சபையினதும், தொகுதியினதும் முறையே ரூபா 1,287 மில்லியன் மற்றும் 1,105.6 மில்லியன் ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை முறையே ரூபா 842 மில்லியன் மற்றும் 467 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் அதிகாரசபையினதும் தொகுதியினதும் நிதி விளைவுகளில் முறையே ரூபா 445 மில்லியன் மற்றும் ரூபா 638 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்சிக்கு அதிகாரசபையின் ஏனைய வருமானம் ரூபா 6,597 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முன்னுரிமை பகுப்பாய்வு

| செலவினம்/ வருமானம் | 2022 ரூபா | 2021 ரூபா | வேறுபாடு ரூபா | வேறுபாட்டின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| <u>மொத்த வருமானம்</u> | 2,476,321,102 | 9,097,284,410 | (6,620,963,308) | (72.78) |
| காணி மற்றும் வீடு விற்பனை வருமானம் | 42,946,164 | 66,880,497 | 23,934,333 | (35.78) |
| ஏனைய வருமானம் | 2,433,374,938 | 9,030,403,913 | 6,597,028,975 | (73.05) |
| <u>மொத்த செலவினம்</u> | 3,671,214,803 | 9,980,663,466 | (6,309,448,662) | (63.22) |
| வட்டி செலவினம் | 79,634,585 | 28,202,477 | 51,432,108 | 182.3 |
| தகவல் மற்றும் தொலைத்தொடர்பு செலவினம் | 4,025,975 | 288,080 | 3,737,895 | 1297.5 |
| சட்ட செலவினம் | 23,276,486 | 15,325,811 | 7,950,075 | 51.87 |
| **வரிக்கு முன் இலாபம்/ நட்டம்** | (1,196,264,706) | (931,917,091) | (264,347,615) | (28.37) |

நேரொத்த அறிக்கைகளுடன் ஒப்பிடும் போது காணி மற்றும் வீடுகளின் விற்பனை வருமானம் 35.78 இனாலும், ஏனைய வருமானம் 73 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. கடன் வட்டி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 182.3 சதவீதமும் பகிரங்கப்படுத்தல் மற்றும் தகவல்களுக்காக செலவினம் 1.297.5 சதவீதத்தினாலும், சட்ட செலவினம் 51.87 சதவீதத்தினாலும் உயர்வடைந்திருந்தது.

### 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் இறுதியில் அதிகாரசபையின் நடைமுறை விகிதம் 2.4:1 மற்றும் விரைவு விகிதம் 2.37:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது முறையே 2.3:1 மற்றும் 2.25:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் மாத்தளை மாவட்ட அலுவலகத்திற்குரிய தம்பளுகமயில் அமைந்துள்ள | தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் இந்த காணியில் கட்டிடம் | காணிகளை வாடகைக்கு வழங்குவதற்கு |

| | | |
|---|---|---|
| 10.52 ஹெக்டேயர் காணியில் 0.146 ஹெக்டேயர் காணி நீர்வழங்கல் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் 2.21 ஹெக்டேயர் மாத்தளை பிரதேச சபைக்கும் 0.7763 ஹெக்டேயர் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் 0.1014 ஹெக்டேயர் தேசிய இயந்திர நிறுவன உபகரணத்திற்கும் அலுவலகங்களை நடாத்திச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்த போதும் எந்தவொரு அறவிடலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நிறுவன மட்டத்தில் கலந்துரையாடி அந்த ஆதனங்களில் வாடகை அடிப்படையில் அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தம்புள்ள மாநகர சபை உரித்து கோரடிய மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் வாடகை அடிப்படையில் அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தும்பளுகம வட்டக்கய காணிக்காக காணி கட்டளைச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் படி பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது கிடைத்தவுடன் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்டரீதியாக அகற்றப்படும் இயந்திர உபகரண திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் பிரதேச டிப்போ ஆக ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்ட போதும் சபையினாலும் அது நகர அபிவிருத்தி ஆணையாளரிடம் இருந்து கோரப்பட்டுள்ளது. | அல்லது கையளிப்பதற்கு விரைவாக நடவடிக்கைகளை எடுத்து வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாளிகாவத்த மாவட்ட அலுவலகத்திற்குரிய 06 வாகனத் தரிப்பிடங்கள் காணப்பட்டதுடன் அந்த A, B, C, D வாகனத் தரிப்பிடங்களில் 2014 சனவரி முதல் மே வரை ரூபா 1.308 மில்லியன் அறவிடவேண்டி இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 2016 முதல் 2020 வரை அவ்வப்போது பல்வேறு நபர்களினால் வாகனத் | இறுதித் தடவையாக பெறப்பட்ட அரசாங்கத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2022 ஒக்டோபர் முதல் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக புதிய மதிப்பீட்டை பெற்று முறையான பிரகாரம் வாகனத் தரிப்பிடங்களை நடாத்திச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்:டுள்ளது. | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வருமானத்தை உழைக்கும் வகையில் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தரிப்பிடம் நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதும் அதற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை . அவ்வாறே 2020 முதல் 05 வாகனத் தரிப்பிடங்கள் அனுமதியற்ற வகையில் பயன்படுத்தப்பட்டிருந்தது. மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இதன் காரணமாக அதிகார சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 46.5 மில்லியன் ஆகும். மேலும் வாடகை கோவை சரியாகவும், பாதுகாப்பாகவும் பேணிச் செல்லப்படாமையினால் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. அதிகார சபையில் இந்த வாகனத் தரிப்பிடங்கள் முறையாக பேணிச் சென்று உயர்ந்த வருமானத்தை உழைக்கக் கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்ட போதும் அவ்வாறு செய்யாமை சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | | |
| (ஆ) | அதிகார சபையின் மாளிகாவத்த மாவட்ட அலுவலத்தின் கீழ் பிரதீபா 04 விழா மண்டபங்கள், 06 சனசமூக மண்டபங்கள் பேணிச் செல்லப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டில் இருந்து அவ்வப்போது அந்த விழா மண்டபங்கள் மற்றும் சனசமூக மண்டபங்கள் பொலீஸ், விமானப்படை, இராணுவம், சிறுநீரக மாற்றம் செய்யும் நிறுவனங்களுக்கு தங்குமிடத் திற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 3.6 மில்லியன் இழக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த நிறுவனங்களுடன் எழுத்து மூல | சனசமூக மண்டபங்கள் மாடிக் குடியிருப்பாளர்களின் பொது நோக்கங்கள் மற்றும் நலன்புரி சேவையின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவைகள் கூட்டமைப்பின் கீழ் இது நிருவகிக்கப்படுகின்றது மேதரை பிரதீபா மண்டபத்தை பழுதுபார்ப்பதற்கு ரூபா 8.6 மில்லியன் மதிப்பீடொன்று தயாரிக்கப் பட்டுள்ளது. அதனால் முகாமைத்துவம் வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானித் துள்ளது. | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து வருமானத்தை உழைக்கும் வகையில் ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையால் நீர், மின்சாரப் பட்டியல்களை அதிகார சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறே 2022 சனவரி முதல் யூன் வரை மோதரை பிரதீபா மண்டபம் மற்றும் 05 சனசமூக மண்டபங்கள் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மாளிவத்தயில் 02 பிரதீபா மண்டபங்கள் மீளாய்வாண்டில் சனவரி – மே வரை வருமானம் உழைக்காதிருந்ததுடன் ரூபா 237,435 பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | அதிகாரசபைக்குச் சொந்தமான வீட்டுத்திட்ட முறைமைகளுக்கு இணைந்ததாக காணப்படுகின்ற வீடுகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தாமல் எஞ்சியிருந்த சிறிய அடுத்துள்ள காணிகளாக கூட்டுமொத்தமாக 3415.76 ஹெக்டேயர் அளவான 977 காணிக் கூறுகள் காணப்பட்ட போதிலும் அந்த காணிகளை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபைக்குச் சொந்தமான வீட்டுத் திட்டங்களில் காணப்படுகின்ற மேலும் வீடமைப்பு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாதுள்ள காணிகள் அடுத்துள்ள காணிகள் என்ற வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து வருமானத்தை உழைக்கும் வகையில் ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | அதிகார சபைக்குச் சொந்தமான 335.58 ஹெக்டேயர் வெற்றுக் காணிகளில் 4199 கூறுகள் காணப்பட்ட போதிலும் அவற்றை சந்தை விலையில் மதிப்பீடு செய்து வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமானத்தை உழைக்க முடியுமாக இருந்த போதும் அதிகார சபை அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | 149 காணிக் கூறுகளில் 5.81 ஹெக்டேயரின் மதிப்பீட்டு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதி விற்பனை செய்யப்பட்டுள்ளது. மிகுதிப் பகுதியை விற்பனை செய்வதற்கு ஏனைய காணிகளை மதிப்பீடு செய்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு வருமானம் கிடைக்கின்ற வகையில் வெற்றுக் காணிகள் பயன்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகாரசபைக்குச் சொந்தமான 125.18 ஹெக்டேயரில் காணப்பட்ட 3,110 காணிக் கூறுகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் உரிமைகோரப்பட்டிருந்ததுடன் அந்தக் காணிகளிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிப் பகுதியில் அனுமதியற்ற வகையில் விடுத்து வைப்பதற்கு முற்படுவது உடனடியாக உரிய மாவட்ட முகாமையாளர்களின் மேற்பார்வையின் கீழ் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் எதிர்காலத்தில் கடந்த காலத்தில் இதுவரை நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள வீட்டுத் திட்டங்களில் காணப்படுகின்ற அனுமதியற்ற வகையில் விடுத்துவைக்கப்பட்டுள்ள காணிக் கூறுகளின் எண்ணிக்கை 1607 ஆகும். அந்தக் காணிக் கூறுகளை நிலையான வீடுகளை அமைத்து குடியிருக்கின்ற நபர்களிடமிருந்து காணிப் பகுதிகளின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை அறவிட்டு அவர்களுக்கு ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் இலக்கம் 2014/01 சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டுள்ளது. சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்குமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை ஒழுங்கு முறையாக தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் காணிகளில் ஒழுங்குமுறைப்படுத்துதலை முறையாகவும் விரைவாகவும் மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஊ) | கைப்பற்றப்பட்ட காணிகளுக்காக இழப்பீடு செலுத்துதல் தாமதமான சந்தர்ப்பங்களின் போது தாமத வட்டி செலுத்துவதற்கு அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்தது. | பல வருட காலம் இழப்பீட்டு மதிப்பீட்டை செலுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டமையினால் வருடாந்தம் 7 சதவீத இழப்பீட்டு வட்டித் தொகை சேர்க்கப்படுகின்றது. அதன் | இழப்பீடு செலுத்துதலை விரைவாக மேற்கொண்டு வட்டி செலுத்துவதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மீளாய்வாண்டின் இறுதியில் அவ்வாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 41.2 மில்லியன் தொகைக்கா செலுத்த வேண்டிய தாமதக் கட்டணம் தாமத வட்டித் தொகை ரூபா 93.50 மில்லியன் ஆக இருந்தது. இதன் பிரகாரம் காணிகளைக் கைப்பெற்றும் போது இழப்பீடு செலுத்துவதற்கு தாமதமடைந்தமையினால் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையைப் போன்று இரு மடங்கினை விட இழப்பீட்டு வட்டித் தொகையை செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் அதிகார சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

பிரகாரம் இழப்பீட்டு மதிப்பீட்டினை விட வட்டி விஞ்சியிருந்தது.

(எ) அதிகார சபைக்குச் சொந்தமான கொழும்பு 10 டாலி வீதியில் அமைந்துள்ள 01 ஏக்கர் 26.5 பேர்ச் காணியில் வீடுகள் மற்றும் சந்தைத் தொகுதிகளுடன் பல்வேறு கலப்பு அபிவிருத்தி செயற்திட்டம் ஒன்றிற்காக பகிரங்க கூறுவிலை கோராமல் 2005 நவம்பர் 09 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் BAY SAT MBH (Pvt) LTD வெளிநாட்டு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த கம்பனியுடன் 2006 யூன் 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணியின் பெறுமதி அரசாங்க பிரதான மதிப்பீட்டாளரின் ரூபா 650 மில்லியன் மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடுவதற்கும் 06 வருடங்களில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ததன் பின்னர் ரூபா 162 மில்லியன் இலாபப் பங்கு அதிகாரசபைக்கு வழங்குவதற்கும் இணங்கி இருந்தது. எனினும் BAY டார்லி வீதி 01 ஏக்கர் 26.5 பேர்ச் காணி பல்வேறு அபிவிருத்தியை வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணிப்பதற்காக BAY SAT MBH (Pvt) LTD பெயருடைய ஜேர்மன் கம்பனியுடன் ஒன்றிணைந்து புரிந்துணர்வு உடன்படிக்கையில் 2006 யூன் 23 ஆம் திகதி கைச்சாத்திட்டிருந்ததுடன் கூறு இலக்கம் 4,5 பகுதி 975 என்ற விற்பனை உரித்துறுதியினால் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2006 ஆம் ஆண்டின் போது அந்தக் கம்பனியின் பெயர் L & T Infrastructure Development ஆக மாற்றப்பட்டிருந்ததுடன் 2007 ஆகஸ்ட் 10 இல் கூறு இலக்கம், 1, 2, 3 பகுதிகள் 983 என்ற விற்பனை உரித்துறுதியின் மூலம் கம்பனிக்கு கையளிக்கப்பட்டு 2016 மே 05 இல் மேலதிக செயற்திட்டத்திற்காக நிறுவனத்தை தெரிவு செய்யும் போதும் மற்றும் காணியினை விடுவிக்கும் போதும் உரிய திட்டமுறைமை பின்பற்ற வேண்டியிருந்ததுடன் அதிகாரசபைக்கு பாதகம் இல்லாத வகையில் நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த துடன் சரியான மேற்பார்வை மேற்கொள்ளவேண்டியிருந்ததுடன் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான விசாரண நடாத்தப்படல் வேண்டும்.

SAT MBH (Pvt) LTD கம்பனி உத்தேசித்த அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றாமல் 2006 ஆம் ஆண்டின் போது அதிலிருந்து விலகி இருந்ததுடன் அந்தப் பணிகள் L & T Infrastructure Development கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இந்த புதிய கம்பனி அதிகார சபை 2016 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யும் போது காணிக்காக புதிய மதிப்பீட்டு அறிக்கை பெறாமல் 10 வருடங்களுக்கு முன்னர் அதாவது 2006 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 650 மில்லியன் பெறுமதியில் கையளித்திருந்தது. 2016 மே 05 ஆம் திகதி உடன்படிக்கையின் கீழ் பணத்தைச் செலுத்துவதற்கு முன்னர் இலக்கம் 983 என்ற உரித்துறுதி மூலம் 2016 மே 05 ஆம் திகதி இந்தக் காணியின் உரித்து கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 712 மில்லியன் வெளிநாட்டு பணம் செலுத்த வேண்டியிருந்தது. எனினும் அதற்கு முரணாக காணிக் கூறுகளின் இலக்கம் 2, 3, 4 என்ற 03 காணிக் கூறுகள் சம்பத் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு ரூபா 800 மில்லியன் தொகையில் 2016 மே 05 ஆம் திகதி சம்பத் வங்கி இரண்டு காசோலை மூலம் இலங்கை ரூபாயில் அதிகார சபைக்கு செலுத்தி இருந்தது.

எனினும் 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை L & T Infrastructure Development கம்பனியினாலும் உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் 07 வருடங்களை விஞ்சியிருந்த போதும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாமை யினால் 975, 983 விற்பனை உரித்துறுதி அதிகார சபை இரத்துச் செய்திருந்தது. இந்தக் காணியில் 1 முதல் 5 வரையான பகுதி மேலும் ஒரு காணிப்பகுதியை ஒன்றிணைத்து பிரிவு 3011 திட்டத்தின் இலக்கம் 01 என்ற (819) காணி 2007 ஒக்டோபர் 31 இல் டாலி வீதி பிரைவட் லிமிட்டட் மற்றும் OAK Street கம்பனியால் 950 மில்லியனுக்கு மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக OAK Street கம்பனி மேல் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றும், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றும் தொடுத்திருந்ததுடன் அந்த வழக்குத் தீர்ப்புக்கு எதிராக மேலும் ஒரு வழக்கு சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்தது. அது 2023 ஒக்டோபர் 23 இல் கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே கம்பனியால் OAK பெயருடைய கம்பனிக்கு இந்த காணியின் கூறு இலக்கம் 05 பகுதி உரித்துறுதியின் மூலம் விற்கப்பட்டிருந்ததுடன் OAK Street (PVT) கம்பனி அந்த உரித்துறுதியை மக்கள் வங்கியில் அடகு வைத்து ரூபா 950 மில்லியன் பெற்றிருந்தது. அதிகார சபையினால் விற்பனை செய்யப்பட்ட உரித்துறுதி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் OAK Street (PVT) கம்பனி அதிகார சபைக்கு எதிராக 03 வழக்குகள் மேல் நீதிமன்றத்திலும், மாவட்ட நீதிமன்றத்திலும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடரப்பட்டிருந்ததுடன் மேல் நீதிமன்றத்தின் மூலம் வழக்குத் தீர்ப்பொன்று வழங்கப்படும் வரை காணியின் உரித்து OAK கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட விடயங்களின் பிரகாரம் அதிகார சபையினால் அபிவிருத்திப் பணியில் குறிப்பிடப்பட்ட காணியினை வழங்கும் போது அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றாத தரப்பினர் தொடர்பாக கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கைகளின் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருந்தமையும் அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்த தரப்பினர் பக்கச்சார்பாக நடவடிக்கை எடுத்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | அதிகாரசபைக்கு சொந்தமான நாவல பறங்கியா கும்புர என்ற பெயருடைய 05 ஏக்பர் 10 பேர்ச் காணி அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 2004 ஆம் ஆண்டின் போது 03 | நாவல, கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள 05 ஏக்கர் 10 பேர்ஜ் அளவான பறங்கியாகும்புர காணியில் வீடமைப்பு | செயற்திட்டத்திற்காக நிறுவனத்தை தெரிவு செய்யும் போதும் மற்றும் காணியினை விடுவிக்கும் போதும் உரிய திட்டமுறைமை பின்பற்ற |

வருடங்களுக்குள் வீடமைப்புத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக Eco Home Lanka Ltd கம்பனியுடன் உடன்படிக்கை செய்திருந்ததுடன் காணியின் அரசாங்கத்தின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 75 மில்லியனுக்கு நிபந்தனைகளுடன் சின்னக்கரை உரித்துறுதி மூலம் கையளிக்கப் பட்டிருந்தது. எனினும் செயற்திட்டப் பணிகளை நிறைவேற்றாதிருக்கும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக நிபந்தனை உடன்படிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் இந்தக் காணியை கையளிக்கும் போது 2004 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 121.5 மில்லியனுக்கு பதிலாக 2003 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 75 மில்லியனுக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அது 2004 இன் மதிப்பீட்டுப் பெறுமதியை விட ரூபா 46.5 மில்லியன் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் கம்பனியால் உடன்படிக்கை செய்யப்பட்ட பிரகாரம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் அமுல்படுத்துவதற்குப் பதிலாக கையளிக்கப்பட்ட காணியில் 29.44 பேர்ச் அளவு ரூபா 196.5 மல்லியன் தொகைக்கு செலிங்கோ ஹொஸ்பிட்டல் சேர்விஸ் கம்பனிக்கு 2006 ஆம் ஆண்டின் போது விற்பனை செய்யப்பட்டிருந்தது. அத்துடன் மிகுதிக்காணி செலான் வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு ரூபா 697.5 மில்லியனும் பெறப்பட்டிருந்தது. 1979 இன் 17 ஆம் இலக்க செயற்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு Eco Home Lanka Ltd கம்பனியுடன் 2004 செப்டெம்பர் 21 ஆம் திகதி அதிகார சபை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2003 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய அரசாங்கத்தின் மதிப்பீடான ரூபா 75 மில்லியனுக்கு நிபந்தனையுடன் உரித்துறுதி மூலம் காணி கையளிக்கப்பட்டிருந்தது. இந்த மதிப்பீடு 02 வருடங்களுக்கு செல்லுபடியாகும். உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டப் பணிகளை நிறைவேற்றாமை மற்றும் காணியின் ஒரு பகுதி செலிங்கோ ஹெஸ்பிட்டல் சேர்விஸ் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டமையால் சின்னக்கரை உரித்துறுதி இரத்துச் செய்யப்பட்டு உரித்து அதிகார சபைக்கு கையேற்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக Eco Home Lanka Ltd இனால் அதிகார சபை உள்ளடக்கிய 04 நிறுவனங்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அது 2023 செப்டெம்பர் 22 ஆம் திகதி கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும் இன்னுமொரு நபரினாலும் காணியின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு நீதிமன்றத்திலும் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. தற்போது இந்தக் காணி ரூபா 05 இலட்சம் மாதாந்த வாடகையில் சவீந்திர வேண்டியிருந்ததுடன் அதிகார சபைக்கு பாதகம் இல்லாத வகையில் நிபந்தனைகளை உள்ளடக்கி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த துடன் சரியான மேற்பார்வை மேற்கொள்ளவேண்டியிருந்ததுடன் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான விசாரண நடாத்தப்படல் வேண்டும்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் கீழ் 2020 யூன் 26 ஆம் திகதி அதிகார சபையினால் உரித்துறுதி இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.
மேலும் 2020 செப்டெம்பர் 01 ஆம் திகதிய இலக்கம் 15/2020 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் இந்தக் காணி பெறுகை செயற்பாடுகள் மற்றும் உடன்படிக்கையின் பெறுகை நடைமுறைகள் மற்றும் உடன்படிக்கையின்றி தனியார் கம்பனிக்கு ரூபா 100,000 தொகையில் மாதாந்த வாடகையில் நீர்வழங்கல் உபகரணக் களஞ்சியத்தை பேணிச் செல்வதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் அதன் மாதாந்த வாடகை 500,000 வரை அதிகரித்து காலம் 2023 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாணப் பொருட்களை சேகரிப்பதற்கு மேலதிகமாக பாரியளவான கொங்கிறீட் கலவை இயந்திரம், பெகோ இயந்திரம் மற்றும் மின்பிறப்பாக்கிகள் பல வருட காலம் முதல் காணியில் அழிவடைவந்து செல்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.
அதிகாரசபையினால் செயற்திட்டத்திற்காக காணி விடுவிக்கும் போது உரிய பிரகாரம் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமை, தேவையான நிபந்தனைகளை உள்ளடக்கிய சரியாக உடன்படிக்கை தயாரிக்காமை, குறித்துரைத்த மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்ளாமை மற்றும் சரியான மேற்பார்வையுடன்

என்ரப்பிரைசஸ் இற்கு வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்காமை போன்ற விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் அதிகார சபையினால் உரிய விடயங்களுக்காக பொறுப்புவாய்ந்த தரப்பினருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஐ) | அதிகாரசபைக்குச் சொந்தமான தம்புள்ளையில் ரங்கிரிகம இல் அமைந்துள்ள 154 ஏக்கர் 38 பேர்ச் காணியில் 5½ ஏக்கர் கடதாசி கைத்தொழில்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு முறையான அங்கீகாரமின்றி 2007 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் எழுத்து மூல உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்பட்டிருக்வில்லை. 2012 ஆம் ஆண்டின் போது கடதாசி கைத்தொழிலுக்காக ஈடுபடுத்தப்பட்ட காணி 2 ஏக்கர் வீதம் எஞ்சிய 3½ ஏக்கர் மீண்டும் அதிகார சபைக்கு வழங்குமாறு தெிகார சபையினால் தம்புள்ள பிரதேச செயலாளரிடம் கோரப்பட்டிருந்தது. இந்தக் காணியில் கட்டிடம் நிர்மானிப்பதற்கு அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டிருந்ததுடன் கடதாசி கைத்தொழிலுக்கு மேலதழகமாக சுற்றாடலுக்கு இசைவானதாக அமைத்தல், துணைப்பயிர்ச் செய்கை மறறும் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை அந்தக் கம்பனியால் 2013 ஆம் ஆண்டின் போது அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போது அவ்வாறான செயற்றிட்டத்திக்கு அங்கீகாரம் | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான தம்புள்ள ரங்கிரிகமயில் அமைந்துள்ள கடதாசி தொழில்சாலையை நிர்மானிப்பதற்காக ECO MAXIMUS (PVT) LTD நிறுவனத்திற்கு உறுத்துறுதி இலக்கம் 5942 மூலம் 30 வருடங்களுக்காக வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. இந்த வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தொடரிலக்கம் 18 இன் நிபந்தனைகளை மீறியதன் காரணமாக அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மிகுதி நடவடிகடகைகள் எடுக்கப்படுகின்றது. | தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் 2016 ஆம் ஆண்டின் போது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து 5½ ஏக்கருக்காக ரூபா 2.13 மில்லியன் மதிப்பீட்டு றிக்கை மற்றும் வாடகை ரூபா 85,000 ஆக அறிக்கை பெறப்பட்டு அந்த வாடகைப் பெறுமதியை பெறுவதற்கு கம்பனியுடன 2019 ஆம் அண்டின் போது கைச்சாத்திடப்பட்டிருந்தது. வாடகை உடன்படிக்கையின் 7 ஆவது நிபந்தனையின் பிரகாரம் கடதாசி கைத்தொழில் தவிர ஏனைய பணிகளுக்காக வாடகை ஆதனங்கள் பயன்படுத்த முடியாதிருந்தபோதும் வாடகையாளரிினால் கடதாசி தொழிலுக்குப் பதிலாக 12 அறைகளுடன் ஹோட்டல் கட்டிடமொன்று வாடகைக் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் வாடகை உடன்படிக்கையின் 18 வது நிபந்தனையின் பிரகாரம் உடன்படிக்கை நிபந்தனையை மீறுகின்றவிடத்து சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதும் அதிகார சபையால் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்காமை கணக்காய்வின்போது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஒ) | மீளாய்வாண்டின் போது கேகாலை மாவட்டத்தில் ஊனமுற்ற நபர்களுக்காக 346 வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 84 மில்லின் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 37.8 மில்லியன் செலவில் 118 வீடுகள் மாத்திரம் நிர்மானிக்கப்பட்டிருந்தது.<br>மேலும் ''விறு சுமித்துரோ'' வீடமைப்பு நிகழ்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,027.5 மில்லியன் | ஊனமுற்ற நபர்களுக்காக 291 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.<br>விறுசுமித்துரோ வீடுகள் 940 பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாட்டின் அடிப்படையில் 946 வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 890.75 மில்லியன் செலவில் 850 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | அதிகாரசபையின் துணைக் கம்பனியான ஓசன் விவ் கம்பனியால் 2012 ஆம் ஆண்டின் போது கஹதுடுவ பிரதேசத்தில் ரூபா 19.21 மில்லியன் செலவில் 398.1 பேர்ச் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கஹதுடுவ செயற்றிட்ட கட்டம் 1 இன் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது இந்தக் காணியில் ரூபா 77.31 மில்லியன் செலவில் 11 வீடுகள் நிர்மானிக்கப்படுவதுடன் 07 வருடங்கள் கடந்திருந்த போதும் இந்த வீடுகளில் 04 வீடுகளை விற்பதற்கு கொள்வனவாளர்களை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறிருக்கும் போது கஹதுடுவ செயற்றிட்டம் II கட்டம் முன்விற்பனை எண்ணக்கருவின் கீழ் ரூபா 387மில்லியன் நிதியம் நிதியேற்பாட்டின் அடிப்படையில் 36 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 2021 நவம்பர் 23 ஆம் திகதி ளபணிப்பாளர் சப தீர்மானித்திருந்தது. எனினும் கம்பனியின் நிதியிலிருந்து ரூபா 40.38 மில்லியன் செலவில் 11 வீடுகளை நிர்மானிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அதந்காக கொள்வனவாளர்களும் கண்டறியப்படவில்லை. | காணப்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கொள்வனவாளர்களை கண்டறிய முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்றிட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுக்கு உரித்தான வகையில் உரியபிரகாரம் விரைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் மற்றும் உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இடையே ‘‘ஒபட கெயக் றட்டட்ட ஹெட்டக்’’ உதவி நிகழ்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண’டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட 8,153 வீடுகளை நிர்மானிக்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 2,589 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 388 மில்லியன் செலவில் 5,878 வீடுகள் நிருமானிக்கப்பட்டிருந்ததுடன் 6,353 வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்ட போதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பழைய நிர்மானங்கள் பூர்த்தி செய்யப்படாமல் 2022 ஆம் ஆண்டின் போது புதிதாக இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,485 வீடுகளுக்காக உதவி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 19 வீடுகள் மாத்திரம் நிர்மானித்தல் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது உள்ளக நிதியேற்பாட்டின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புக் கடன நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 600 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு 1,000 வீடுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ரூபா 147.42 மில்லியன் செலவில் 391 வீடுகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது உரியபிரகாரம் பணம் கிடைக்காமையின் காரணமாக நிகழ்ச்சித் திட்டத்த பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து தெரிவுசெய்யப்பட்ட வீட்டு நலனாளிகளுக்கு வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | “மிகிந்து நிவாச” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டிலழுருந்து முன் கொண்டுவரப்பட்ட 557 வீடுகளின் வேலைகள் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 92.23 செலவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 210 வீடுகள் மாத்திரம் நிர்மானிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது புதிதாக 77 வீகளின் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் அதில் 21 வீடுகளின் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்காகவும் ரூபா 39.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 17.83 மில்லியன் செலவில் 08 வீடுகள் மாத்திரம் நிர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே செவன உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் ரூபா 75 மில்லியன் ஒதுக்கப்பட்டு 100 வீடுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் ரூபா 32.18 மில்லியன் செலவில் 94 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு வீட்டின் நிர்மாணம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்டிருந்த டிபாருளாதார செருக்கடியினால் திறைசேரியிலிருந்து பணம் ஒதுக்குதல் மேற்கொள்ளப்படாமையினால் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து வீட்டு நலனாளிகளுக்கு வழங்குதல் வேண்டும். |
| (இ) | வீடமைப்புத் தொகுதிகளை திருத்துவதற்காக 72 ஒப்பந்தங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 504.50 மில்லியன் ஆன முற்பணத் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 300.37 மில்லியன் 03 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான கால வீச்சிலும் ரூபா 204.1 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட கால வீச்சிலும் காணப்பட்டிருந்த போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதில் ரூபா 145.21 மில்லியன் | இந்த முற்பணத் தொகையில் ரூபா 38.81 மில்லியன் தற்போது தீர்த்துவைக்கப்பட்டுள்ளது. மிகுதி செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | முற்பணத்தை நாளதுவரையாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் ரூபா 176.51 மில்லியன் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கும், ரூபா 182.82 மில்லியன் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த நடவடிக்கைகளை நாளதுவரையாக நிறைவேற்றாமை மற்றும் நலிவான செயற்திட்ட மேற்பார்வை இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்திய வீடமைப்பு உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2400 வீடுகள் ரூபா 1200 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் கீழ் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 242 மில்லியன் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 820 வீடுகளை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்ட போதும் ரூபா 41.67 மில்லியன் செலவில் 138 வீடுகள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும் பழைய வீடமைப்புத் தொகுதியை பழுதுபார்த்தலின் கீழ் கம்பஹா ஹிம்புட்டு உயன வீடமைப்பு தொகுதியில் மலக்கழிவு முறையினைத் திருத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 76 மில்லியன் நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் அதில் ரூபா 51 மில்லியன் நீர்வழங்கல் சபைக்கு செலுத்தப் பட்டிருந்த போதிலும் திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ரூபா 5 இலட்சம் போதியளவில் இல்லாமையினால் ரூபா 12 இலட்சம் வீதம் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. அதன் காரணமாக வீட்டின் நிர்மாணங்கள் மந்தகதியில் நிலையில் காணப்பட்டது. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகார சபையினால் மீளாய்வாண்டில் 07 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ரூபா 4,458.39 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ரூபா 3,352.92 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது.<br>திட்டமிடப்பட்ட 02 சியபெத்த செயற் திட்டம் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 02 செயற்திட்டங்களை நிர்மாண நடவடிக்கைகள் 22 சதவீதம் மற்றும் 29 சதவீத மட்டத்தில் காணப்பட்டதுடன் மேலும் 03 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 05 சதவீதத்திற்கும் 08 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது. | 06 செயற்திட்டங்களின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளது. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை ஆக்கபூர்வமானதாகப் பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதிகார சபை தனியார் முதலீட்டாளருடன் ஒன்றிணைந்து 10 வீடமைப்பு செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்ததுடன் அதற்காக காணிகளை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 180.70 மில்லியன் அதிகார சபைக்கு கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 167.36 மில்லியன் 2013-2017 இற்கிடையிலான காலப் பகுதியில் வழங்கப்பட்ட காணிக்காக கிடைத்திருந்தது. இதன் பிரகாரம் காணி வழங்கப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் 08 செயற்திட்டங்களின் பணிகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒப்பந்த முற்பணமாக அதிகார சபை வழங்கியிருந்த ரூபா 291.47 மில்லியன் முற்பணத் தொகையில் ரூபா 233.48 மில்லியன் வழங்கி இரண்டு வருடங்களும் ரூபா 57.61 மில்லியன் வழங்கி 05 | அரச தனியார் ஒன்றிணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனியார் முதலீட்டாளர்களுடன் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் ஆகும். இதில் ஹன்தான வீடமைப்பு செயற்திட்டத்தின் கட்டம் II மற்றும் கட்டம் III புவியியல் ஆய்வு அறிக்கை தற்போது பெறப்பட்டுள்ளதுடன் அதன் மற்றும் பரிந்துரைகளுக்கு இணங்க மீண்டும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் மற்றும் விலை தளம்பல்களுக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் அமைச்சரவைக் குறிப்பொன்று மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br>யக்கல சியனே உயன சோபா உயன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் களுகல பல்லேகலே ரீஜென்சி பார்க் வீடமைப்பு | செயற்திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் ஒப்பந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்காமையின் காரணமாக இந்த முற்பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | செயற்திட்டம் கட்டம் I மற்றும் கட்டம் II, ஜல்தர வீடமைப்பு செயற்திட்டம் கட்டம் II, ஹோமாகம மவுன்ட் கிளிப்பர்ட் வீடமைப்பு செயற்திட்டம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வாத்துவ - நுககஹகனத்தவத்த வீடமைப்பு செயற்திட்டம், ராகம லாவன்யா ஹைட்ஸ் வீடமைப்பு செயற்திட்டம் - Escrow கணக்கின் பணம் பெற்றுக்கொள்வதற்கு வழக்கொன்று தொடரப்பட்டுள்ளது. மிஹிந்தபுர வீடமைப்பு செயற்திட்டம் - மீண்டும் அமுல்படுத்துவதற்காக தேவையான அமைச்சரவை அங்கீகாரம் 2021.11.30 ஆந் திகதி கிடைத்திருந்தது. |

**3.4 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 மே 30 ஆம் திகதிய 12 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றில் ஊழியர் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய நிறுவனத்திற்கோ அமைச்சரவை அங்கீகாரமின்றி விடுவிக்க முடியாதிருந்ததுடன் அவ்வாறு முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் விடுவிக்கப்படுமாயின் அந்தக் காலத்தில் எந்தவொரு கொடுப்பனவும் மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். எனினும் அதற்கு முரணாக அதிகார சபையின் 09 உத்தியோகத்தர்கள் அமைச்சு, கூட்டுத்தாபனம் மற்றும் கம்பனிகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதில் | வீடமைப்பு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணையாக கடமைகளை மேற்கொள்கின்றமையினால் 07 உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் மீளளிப்புச்செய்யப்படவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 07 உத்தியோகத்தர்களுக்கு ஆண்டின் போது அதிகார சபையினால் செலுத்தப்பட்ட ரூபா 3.6 மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் என்பன மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

**3.5 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2164 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1716 ஆகும். எனினும் ஒவ்வொரு பதவிகளையும் ஆய்வு செய்த போது 728 வெற்றிடங்கள் மற்றும் 181 மிகைகள் காணப்பட்டது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நியமிக்கும் போது 670 வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் 232 காணப்பட்டது. | அத்தியாவசிய வெற்றிட பதவிகளை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மிகைப் பதவியணியினரை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்.**

**4.1 ஆண்டறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 செப்டெம்பர் 12 ஆம் திகதிய இலக்கம் 402 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரிதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அதிகார சபை 2019, 2020 மற்றும் 2021 என்ற ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை 2023 ஒக்டோபர் 26 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2019, 2020 ஆண்டறிக்கை மொழிபெயர்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபையினால் 2021 – 2024 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் வழிகாட்டி 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அதிகாரசபை தயாரித்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு என்பன பொது முயற்சிகள் திணைக்கத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2021 இன் வழிகாட்டி 4.2 ஆம் பந்தியின் ''எச்'' பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு முகாமைத்துவக்குழு கூட வேண்டியிருந்ததுடன் அதன் பரிந்துரைகளுடன் அறிக்கையொன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் இரண்டு மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2022 இல் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் 03 கூட்டங்களுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பங்குபற்றுகின்ற நிதி அமைச்சின் பிரதிநிதி கோரப்பட்ட போதும் திகதியொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2030 இன் நிலைபேறான அபிவிருத்திக்கான நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் அதிகாரசபையினால் தமது விடயப்பரப்பிற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்கம் 11 இன் பிரகாரம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் இலக்கினை இனங்காணல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு இலக்குகளை அடைந்து கொள்ளல் மற்றும் அவற்றின் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்படல் வேண்டும். |